பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு2032 வைகாசி 08 செவ்வாய்க்கிழமை 22-05-2001 தொலை பேசி: 3378 ஒலி: 154

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி. 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-2014)

## திருமலை செயலக கட்டடத்தில் நேற்று பாரிய குண்டு வெடிப்பு!

### மூன்று ஊழியர்கள் காயம்

திருமலையில் அதியுயர் பாதுகாப்பு களைக் கொண்ட பிரடறிக் கோட்டைப் பகுதியில், அமைந்துள்ள செயலகக் கட்டடத்தில் புனர்வாழ்வு அமைச்சின் அலுவலகத்தில் குண்டொன்று வெடித்ததில் மூவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் அமைச்சில் சாரதியாகக் கடமையாற்றும் பாலித என்பவர் கடும் காயங்களுக்கு இலக்காகி திருமலை வைத்தியசாலையில் (8ம் பக்கம் பார்க்க)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில

## சோதனைக் குழாய் வெடித்தது 5 மாணவிகள் காயம்

(யாழ்ப்பாணம்)

இரசாயன பாட செயல் முறைப்பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது சோதனைக் குழாய் தற்செயலாக வெடித்ததில் செயன் முறைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 5 மாணவர்கள் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிற்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 1.50 மணியளவில் யாழ் வேம்படி மகளிர்கல்லூரியில் நடைபெற்றுள்ளது.

இந்தப் பரிசோதனையில் [8ஆம் பக்கம் பார்க்க]

புலிகள் மீதான தடை நீக்கம் பற்றி ஆராய

# நோர்வேதூதுவர் எரிக்சோல்ஹெய்ம் அமெரிக்காவுக்கு அவசர விஜயம்

## பிரதி வெளிவிவகார அமைச்சரும் உடன் சென்றார்

(ராய்ட்டர் செய்திச் சேவை)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை அடுத்து நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்மும், நோர்வேயின் வெளிவிவகார பிரதி அமைச்சரும் அவசரஅவசரமாக நேற்றுஅமெரிக்காசென்றுள்ளதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிற்கு அவசரவிஜயமொன்றை மேற்கொண்டுள்ள தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் பிரதிவெளிவிவகார அமைச்சரும் அமெரிக்கத்தலைவர்களைச் சந்தித்துவிடுதலைப்புலிகள் மீதானதடையை நீக்குவது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்என்று அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இலங்கை அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விட்டிருக்கும் இவ் வேளையிலும், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசு மறுத்து வரும் வேளையில், நோர்வேயின் தூதுவர் எரிச்சோல் ஹெய்மும், நோர்வேயின் பிரதி வெளிவ்வகார அமைச்சரும் இணைந்து அரிக்காவிற்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருப்பது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமொன்றாக நோர்வேயின் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுவதாக ராய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்கனவே தடை செய்திருக்கும் அமெரிக்காவிற்கு இவர்கள் சென்றிருப்பது புலிகள் மீதான தடையை நீக்கு [8ஆம் பக்கம் பார்க்க]

## சமாதான முயற்சிகள் கால தாமதமாகும்?

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதாமுயற்சிகள் காலதாமதமடையலாமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கு முன்னர் மூன்று நிபந்தனைகளை விதிக்கப்பட்டு அவை நிறைவேற் 8ஆம் பக்கம் பார்க்க

## அத்தியடியில் அட்டகாசம் 10மாணவர்களின் விபரம் நீதிமன்றில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அத்தியடிப் பகுதியில் இடம் பெற்ற மாணவர் குழுவின் அட்டகாசத்தில் பங்கேற்ற மேலும் பத்து மாணவர்களின் பெயர் விபரங்கள் நேற்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுளளது.

மேற்படி நீதிமன்றில் தெரிவிக்கப்பட்ட பத்து மாணவர்களில் ஒரு மாணவன் யாழ்ப் [8ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் மீதான தடையைத் தற்காலிகமாக நீக்க சட்டவல்லுனர்களுடன் ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்தின் மத்தியஸ்தத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க வசதியாக அவ்வமைப்பின் மீதான தடையை அரசாங்கம் தற்காலிகமாக நீக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளதாக அரச உயரதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி சமரசப்பேச்சுக்களை ஆரம்பிக்க வசதியாக அவ்வமைப்பின் மீதான தடையை நீக்குவது பற்றி (8 ம் பக்கம் பார்க்க)

## தடையைப் படிப்படியாக நீக்க புலிகள் இணங்கவேண்டும்

### மன்னார் ஆயர் வேண்டுகோள்

(மன்னார்)

இலங்கை அரசு தம்மீது விதித்துள்ள தடையை நீக்குமாறு விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்திருப்பது நியாயமானதொன்றாகும்.

எனினும் விடுதலைப்புலிகள் தம்மீதான தடையை உடனடியாக நீக்குமாறு வெட்டொன்று துண்டொன்றாகக் கூறாமல் படிமுறைகளின்அடிப்படையில் இதனை செயற்படுத்தவேண்டுமென்று மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்புஜோசப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தம்மீதான தடையை நீக்குமாறு புலிகள் கோருவது நியாயமானதாகும். அதனைக் கோருவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு.

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் சமாதான முயற்சிகளில் அக்கறை காட்டி வரும் இவ்வேளை பிரித்தானியா உட்பட ஏனைய நாடுகளில் புலிகளைத் தடைசெய்ய வேண்டு [8ஆம் பக்கம் பார்க்க]

## விமானசேவை இன்றும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்- கொழும்பு பயணிகள் விமானசேவை இன்று இடம்பெறமாட்டாதென [8ஆம் பக்கம் பார்க்க]

## எவ்வளவு செலவானாலும் ஆங்கிலமூலம்கற்றல் கைவிடப்படமாட்டாது

(கொழும்பு)

ஆங்கில மொழிமூலம் க. பொ. த (உ. த) பாடங்களை கற்பதற்கு மொத்தம் 925 மாணவர்களே விண்ணப்பித்திருந்த நிலையிலும் அதற்கு ஏற்படப் போகும் செலவீனத்தைப் பொருட்படுத்தாது கல்வியமைச்சு 8 ஆம பக்கப் பார்க்க

## யாழ் வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர் பார்வையாளரைத் தாக்கினர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ள மகனைப் பார்க்கச் சென்ற தந்தை வைத்திய சாலைபாது 8ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

திரு வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் ஆகியஎனதுதேசிய அடையாளஅட்டை (இல:578 23051V) 02-05-2001 ஒன்று இருபாலைக்கும் அடைப்பட்டாவிலுக்கும் இடையில் தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3153)

## சேக்கிழார் விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ முருகமூர்த்தி வித்தியாலய இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சேக்கிழார் விழா நடைபெறவுள்ளது. (செ)

## இன்று கூட்டம்

(துன்னாலை)

தென்மராட்சி மக்கள் மீளக்குடியமர்தல் மற்றும் சாவகச்சேரி நகர் வர்த்தக நிலையங்கள் புனரமைப்பது சம்பந்தமான கூட்டம் இன்று மு.ப. 10.00 மணிக்கு கொடிகாமம் சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக சாவகச்சேரி வணிகர் மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இம்மன்றத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-41)

## சவுக்கம் தோப்புக்கு தீவைப்பு

(செம்பியன்பற்று)

மணற்காட்டில் சவுக்கம் தோப்புக்கு தீயிட்டு எரிக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றுவருகின்றன.

விறகு வியாபாரிகளே இவ்வாறான நாசகார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. (உ-42)

# மக்கள் குறை நிவர்த்தி சேவையில் 9 ஆயிரத்து 622 முறைப்பாடுகள்

## 3107 முறைப்பாடுகளுக்கு உடன் தீர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வட-கிழக்கு தமிழ் விவகார அமைச்சின்ஏற்பாட்டில்யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் இடம் பெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவையில் பொதுமக்களின் 9 ஆயிரத்து 622 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 3 ஆயிரத்து 107 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது:

6 ஆயிரத்து 350 முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட திணைக்கள தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு விரைவில் தீர்க்கப்படவுள்ளன.

இதேவேளை அடையாள அட்டைகளுக்காக 2ஆயிரத்து 361 முறைப்பாடுகள் ஏற்கப்பட்டன.

இவற்றில் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இரண்டு வாரத்துள் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

கடவுச்சீட்டுக்காக இருநூற்றி 40 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளதுடன் இவையும் விரைவில் உரியவர்களிடம் வழங்கப்படவுள்ளது:

இதேவேளை, அமைச்சினால் லங்கா சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்கள் 300 பேருக்கு ஐந்து மாத சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் தெங்கு அபிவிருத்தி சபையைச் சேர்ந்த இருபது ஊழியர்களுக்குமூன்று மாத சம்பளம் வழங்கப்பட்டுளது.

பதிவு செய்யப் பட்ட அறுபத்தைந்து முறைப்பாடுகள் மொத்த முறைப்பாடுகள் பிரச்சினைகளுடன் சம்பந்தப்படாதவையாக கணிக்கப்பட்டுள்ளது: [வ-15

# இரவு நேரக் கலை நிகழ்ச்சிகளுக்கு முன்கூட்டி அனுமதி பெறவேண்டும்

## சிவில் நிர்வாக அலுவலகம் அறிவிப்பு

[மந்திகை]

வடமராட்சிப் பகுதி ஆலயங்களில் இரவு நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் சிவில் நிர்வாகஅலுவலகத்தின் அனுமதிபெறவேண்டுமென சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பமாவதை யடுத்து இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது:

ஆலயங்கள், மற்றும் பொது இடங்களில் இரவுநேரக்கலை நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் எட்டு நாட்களிற்கு முன் விண்ணப்பித்து அதற்கான அனுமதிபெறுவது தொடர்பாக அறிவுறுத்தல் சிவில் நிர்வாக காரியாலய விளம்பரப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-23]

## நாடக ஆற்றுகை

(வடமராட்சிகிழக்கு)

தற்கால அரசியல் நிலைமையை அடிநாதமாகக் கொண்ட ''இரு கோட்டுச் சித்திரங்கள்'' எனும் நாடகம் கடந்த ஞாயிறன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மேடையேற்றப்பட்டது. (உ-43)

## பாதாள உலகினர்க்கு சிறையிலேயே விசாரணை

[கொழும்பு]

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த நபர்கள் இனி வரும்காலங்களில் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாறாக அவர்களது சாட்சியங்கள் சிறைச்சாலையில் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் அங்கேயே இடம் பெறும்.

பாதாள உலகக் குழுவினரை நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லும் போது ஏற்படும் வீணான பிரச்சினைகளைத்தவிர்க்கும் வகையிலேயே இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [உ-7]

## தமிழக முதல்வருக்கு வரதர் வாழ்த்துச்செய்தி

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் தற்போது மிகவும் இக்கட்டான துன்ப துயரங்கள் நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந் நிலைமையை மாற்றியமைக்கும் விதத்தில் இலங்கை அரசும் இந்திய மத்திய அரசும் இணைந்து செயற்படவும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான அரசியற் தீர்வு காணவும் முன் முயற்சிகளை தாங்கள் முன்னெடுக்க வேண்டும்:

நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் முதல்வராக செல்வி ஜெயலலிதா தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறித்து, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில், வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## பெண்கள் தற்கொலை தடயங்கள் மீட்பு

(கொழும்பு)

களுத்துறை ஆற்றில் தற்கொலை செய்த இரண்டு பெண்களினதும் கையெழுத்துடன் கூடிய கடித உறை, ஆபரணங்கள் பணம் போன்ற சிலதடயப் பொருட்களைப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

அப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட தடயங்களின் பிரகாரம் தற்கொலை செய்து கொண்ட பெண்கள் 50,30 வயதை உடையவர்கள் என ஊகிக்கப்பட்டுள்ளது:

இப்பாலத்தில் இருந்து தற்கொலை நோக்கில் 4பேர் பாய்ந்ததாகவும் ஆனால் இரண்டு பேர்பற்றிய தகவல்களேகிடைத்துள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்: (உ-7)

## பூரான் கடிக்கு இலக்கான மூவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

வடமராட்சி பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் பூரான் கடிக்குள்ளான மூவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துன்னாலை மத்தியைச் சேர்ந்த கனகரத்தினம் கனகேஸ்வரன்(வயது34) இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த சிற்றம்பலம் சுதாகரன்(வயது17)துன்னாலை தெற்கைச் சேர்ந்த சிவசுந்தரம் சிவராஜன்(வயது 4) ஆகியோரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்: (உ-23)


## அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

வழ. இல. ம. நீ/239

முருகேசு கந்தசாமி பெண் வேலுப்பிள்ளை மகள் பத்மலட்சுமி
அல்லாரை, வடக்கு கொடிகாமம்
தற்போது மே/பா திருமதி சிவமணி கணேசமூர்த்தி, 'இந்திரவாசா'
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
வழக்காளி

எதிர்

முருகேசு கந்தசாமி
அல்லாரை வடக்கு, கொடிகாமம்:
எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு,

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி உமக்கும் தனக்கும் இடையில் நடைபெற்ற திருமணத்தை நீக்குவதற்கு இந் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். 13. 06. 2001 அன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் நேரிலோ அல்லது சட்டத்தரணி மூலமோதோன்றி மறுமொழி ஏதேனும் இருப்பின் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் அறிவிக்கப்படுகிறீர்.

நீர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப் படுத்தவும் படுகிறீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்கள் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தவும்படுகிறீர்.

2001ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைந்தவர்
பவானி சற்குணராசா
[வழக்காளியின் பதிவு பெற்றசட்டத்தரணி.]

(கி-2016)


## இராசி பலன்

22-5-2001
(வைகாசி 8, செவ்வாய்)

சதுர்த்தசி மு.ப 9.53 வரை
பரணி ந: ப 12.19 வரை
ராகுகாலம் 2.52- 4.22
நல்லநேரம் 10.32- 11.52
சித்தம், கார்த்திகை விரதம்
அமாவாசை விரதம்

**மேடம்**
காரிய நிறைவு, அமைதியானநிலை, நண்பர்கள் உதவி, தேகசுகம்.

**இடபம்**
உஷ்ணவியாதி, பொருள் விரயம், நித்திரைக் குறைவு, மனக்கிலேசம்.

**மிதுனம்**
குடும்ப சுகம், மனமகிழ்ச்சி, காரிய நன்மை, தெய்வ சிந்தை.

**கடகம்**
செய்தொழில் நன்மை, இலட்சுமீகரம், நல்ல சம்பவம், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
காரிய ஜெயம், வயிற்றுக் கோளாறு, அச்சமான நிலை, பிரயாணம்.

**கன்னி**
பிரயாண பயம், வியாதி ஏற்படல், உறவினர்வெறுப்பு, முயற்சி தாமதம்.

**துலாம்**
களஸ்திர சுகம், மதிக்கப்படல், காரிய ஜெயம், பிரயாணம்.

**விருச்சிகம்**
சத்துரு ஜெயம், பகைவர் விலகுவர், திடீர் பயணம், மனம் தெளிவடைதல்.

**தனுசு**
தொழில் அனுகூலம், நிலை மாற்றம், குடும்பப்பிரச்சினை, முயற்சி தாமதம்.

**மகரம்**
மனக்கிலேசம், தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம், தாய்வழி உறவு.

**கும்பம்**
அந்நியர் சந்திப்பு, இனிய அனுபவம், காரிய நன்மை, வாக்குப் பலிதம்.

**மீனம்**
பொருள் விரயம், வீண் வாதம், முயற்சி தாமதம், தொழில் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

வளவன்

## மாநகர சபைக் கூட்டத்தில் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடிப்பகுதியில் வீடு பார்க்கச் சென்ற முஸ்லிம்களை தாக்கிய சம்பவத்தை யாழ். மாநகரசபை வன்மையாகக் கண்டிக்கிறது என யாழ் மேயர் என் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நடைபெற்றமா நகரசபைக்கூட்டத்திலேயே அவர் இக் கண்டனத்தைத் தெரிவித்தார். (ஜ-9)

## மின்சாரம் வழங்கப்படுமா?

(கல்வயல்)

நவாலி வடக்குப் பகுதிக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் மனக்குறை வெளியிட்டுள்ளனர்.

நவாலியின் ஏனைய பகுதிகளுக்கு மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது: (உ-111)

# புவியின் பெரும் வளமாக விளங்கும் நீரினைப் பேணுவதற்கு நீர் முகாமைத்துவம் அவசியம்

திருமதி நவமணிசெல்வராசா
ஒய்வு பெற்ற பேராசிரியை

உயிரானது நீர் என்று Burkinabe தேசம் ஆதியில் கூறியுள்ளது. இயற்கையின் மிக அற்புதமான வளம் நீர்: ''நீரின்று அமையாது உலகு'' என்றார் வள்ளுவப் பெருந்தகை. நீரின் சிறப்பை பண்டைக் காலத் தமிழ்ப் புலவர்களாகிய ஔவையார், வள்ளுவர் ஆகியோர் மிக அழகாகப் பலமுறை எடுத்து விளக்கியுள்ளனர்.

''வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன்
உயர்வான்''

என்பது ஔவையாரின்கூற்று.

## நீர் விட்டம்

உலகில் 94% கன அளவானது சமுத்திரங்கள்; 4.12% தரைக்கீழ் நீர்; பனிப்படலங்கள் 1.65%; ஏரிகள் 0.016%; மண்ஈரலிப்பு 0.0005% வளிமண்டல நீராவி 0.0001%; இறுதியாக ஆறுகள் 0.0001% நீர்க்கோளத்தின் அடியில் ஒரு பங்காகவுள்ளது தான் மனிதனுக்குக் குடிநீராகப் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.

20ம் நூற்றாண்டின் நீரின் நுகரக்கூடிய அளவையும் வளத்தையும் ஒப்பிடும்போது; உலகக் கண்டங்களில் ஆசியாவும் ஐரோப்பாவும் நீருக்கு மிக அவாவுள்ளனவாகக் காணப்படுகின்றன. நீரின்உபயோகமானது. நீர்ப்பாய்ச்சல் தொழிற்சாலைகள் முதலியவற்றிலும் பார்க்க சனத்தொகை அதிகரிப்பினால் இக்கட்டான நிலையை அடைகிறது. அத்துடன் பரவலான மாசுறுதல் நீரின் தரத்தையும் பாதிக்கிறது. ஆயினும் நீர் முற்றும் அழிவதில்லை.

நீரானது உலகின் சமுத்திரங்கள், ஆறுகள், பனிப்படலம், மண், வளிமண்டலம் அத்துடன் எல்லா உயிரினங்களுக்குமிடையே சுழன்று வருவதனால் நீர் வட்டம் என்று அழைக்கப்படுகிறது. இதனால் நீர்முற்றாக அழிவடையாமல் இருக்கிறது. இது ஒரு காய்ச்சி வடித்தல் விநியோகத் தொகுதியாக உள்ளது.

'விசும்பிறு துளிவீழின்
அல்லாமல் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்பதரிது'
'துப்பார்க்குத் துப்பாய
துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை'

என்றார் வள்ளுவர்.

மேலும் வள்ளுவர்;

'வான் நின்று உலகம்
வழங்கி வருவதால்
தான் அமிழ்தம்
என்றுணரற் பாற்று'

## குடிப்பதற்கும் குளிப்பதற்கும்

முற்காலத்தில குடியிருப்புக்கள் யாவும் நீர் நிலைகளை ஒட்டியே அமைக்கப் பெற்றன. உதாரணமாக யூபிறாட்டிஸ், தைகிறிஸ் நைல், இந்து போன்ற நதிகளை அண்டிக் குடியிருப்புக்கள் அமையப் பெற்றன. இதற்கு இரு காரணங்கள் உண்டு, 1. குடிநீராகப் பயன்படுத்துவதற்கும் அத்துடன் உணவிற்கும், மனிதனின் எப்பொழுதும் களியாட்டலாகிய நீராடலுக்கும் உதவுகிறது.

2. ஏறக்குறைய அதே முக்கியமாகக் கமம் செய்வதற்கு வேண்டிய மண்ணிற்கு புத்துயிர் ஊட்டக்கூடியபயளையை நடுவதுமாகும். எனவே நீருள்ள இடங்களில் பண்டைக்கால மனிதன் விவசாயம் செய்யத் தொடங்கினான். இதனால் இதன் இரட்டையராக நாகரிகம் ஆரம்பித்தது! இதை டானியில் பெப்ஸ்ரர் திறமையாக கமக்காரர்கள் தான் நாகரிகத்தைகட்டி எழுப்பியவர்கள் எனக்கூறினார்.

உயிரினங்கள் யாவற்றின் வாழ்க்கைக்கும் நீர் தேவை. நீரின் மூலக்கூறுகள் இருபங்கு ஐதரசனையும், ஒருபங்கு ஒட்சிசனையும் கொண்டுள்ளது என்பதை அன்டோயின் வாலோசிய [A.Lavolsier] 1785ல் எடுத்துக் காட்டினார். நீரானது ஒருபொதுவான கரைப்பானாக உள்ளது. அதில் சிலவாயுக்கள் முக்கியமாக ஒட்சிசனும், நைதரசனும் அத்துடன் கனிப்பொருட்களும் உலோகப் பொருட்களும் கலந்துள்ளன. இவற்றை உண்ணும் அல்லது அதில் தங்கியிருக்கும் உயிரினங்களுக்கும் குறிப்பிட்டஅளவு இபபொருட்கள் தேவை. இப்படியான நல்ல நீரை மனிதன் மாசுபடுத்தி வருகிறான.

## நீர் மாசுபடுதல்

தற்போது மனிதன் வீசி எறியும் பொருட்களாகியவை தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனக்கழிவுகள் முதலியன அருகில்இருக்கும்நீர்த்தேக்கத்தை அடைகின்றன. அத்துடன் வெள்ளநீர் அடித்துச்செல்லும்போது நீரில் கரையக் கூடியன எல்லாம் அதில் கரைந்து மாசுறுகின்றது.

18 ஆம் நூற்றாண்டில் லூயிபாஸ்ரர் ஆகியோர் நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி போன்ற நோய்களுக்கு முக்கியமாக நீரிலுள்ள தீங்கு விளைவிக்கும் பற்றீரியாக்கள் காரணமாய் உள்ளன என்று விளக்கினார்கள். உலகின் நோய்களில் 80 சதவீதம் நீருடன் தொடர்புள்ளன என்பது தெரிந்ததே.

பண்டைக்காலங்களில் சில உலக நகரங்களில் உதாரணமாக; இத்தாலியின் வெனிஸ் கி.பி 400 ஆம் ஆண்டில் நீரை மணல்மூலம் வடிகட்டி உபயோகித்தார்கள். 1926 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள இலண்டன் நகரின் தேம்ஸ் நதியில் ஸிம்ப்ஸன் [Simpson] என்பவர் பரிசோதனை ரீதியாக ஒரு குறிப்பிட்ட மேற்பரப்பின் அடியிற் பெரிய கற்கள். அதன்மேல் சிறுகற்கள், அதன்மேற் கூழாங்கற்கள் பரப்பி, அதன்மேற் சிப்பிகள், பின் பெருமண், இறுதியாகச் சிறுமணலைப் பரப்பி மாசுபடுத்தப்பட்ட ஆற்றுநீரை இவற்றினூடாகக் கொணர்ந்து தூயநீராக்கின்றார்.

பிற்காலத்தில் இப்படியாக வடிகட்டிய நீருக்கு குளோரின் சேர்த்து நீரிலுள்ள தீங்கு விளைவிக்கும் பற்றீரியாக்கள் ஏறக்குறைய முழுமையாக அழிக்கப்பட்டன.

தற்போது அசுத்த நீரை 20 மைக்கிறோன் வடிகட்டி அடையவினூடாகஓடவிட்டு, இரசாயனப்பொருட்களை அகற்றி அத்துடன் நீரின்உட்கொள்ளுவதற்குகந்த குணங்களை விருத்திசெய்து இறுதியாக U - V கதிர்களைக் கொண்ட தொற்றுநீக்கியினூடாக நீரைச் செலுத்தி பற்றீரியா, வைரசு வேறுபல நுணணங்கிகள் அழிக்கப்படுகின்றன.

## புனிதத்தன்மை

''ஆறறுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு ஊற்றுப் பெருககால் உலகூட்டும்'' என்றார் ஔவையார்.

அத்துடன் மனிதனின் குணமும நீருடன் தொடர்புண்டு என்பது பின்வரும் அடிகளால் விளக்கப்படுகிறது. ''நீரின்றியமையாது உலகெனில யார் யார்க்குக் வானின்றமையாது ஒழுக்கு'' ''கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கு எடுப்பதூஉம் எல்லாம் மழை''

மனிதன் நன்நடத்தை நன்னீருடன் இணைத்து பின்வருமாறு கூறப்பட்டுளளது. ''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை'' மேலும்

''வேதம் ஓதிடும் வேதியர்க்
கோர் மழை
நீதி மன்னர் நெறியினுக்
கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க்
கோர் மழை
மாதம் மூன்று மழை யெனப்
பெய்யுமே''

இராமலிங்க சுவாமிகள் அவர்கள் மிக உருக்கமாக, 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்று கூறினார். சைவசமயத்தில் நீர் புனிதமானது. பாவங்களைத் தீர்ப்பதனால் ''தீர்த்தம்'' என்று பெயர் வந்தது. ''சென்றாடு தீர்த்தங்கள் ஆனால் கண்டாய்'' என்று அப்பர் சுவாமிகள் பாடினார்.

''ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்'' என்பது திருவாசகம்.

''காரே உன் நீரை எல்லாம்
கள்வன் கவர்ந்தானே
நீரே உதவாய் நெரியாமோ-
நேரேதான்

வாரியுண்டு வாரிமென்று
வாரியுண்டுவான் இரண்டு
பேரிகொண்டு நீ திரண்டு
பெய்''

என்று கிறிஸ்தவப் புலவரான வேதநாயகம் பிள்ளை பாடியுள்ளார்.

## இலங்கை முதலிடம்

[illegible]

இலங்கையின் இப்படியான மாதிரி எடுத்துக்காட்டுகள் முறையானது உலக நீர் வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும். இரு முக்கிய அம்சங்கள் என்னவென்றால்

1. புவியின் அளப்பரிய வளம் நீர் என்பதும்

2. நேரான கூட்டுறவுத் தன்னுதவி போன்ற முயற்சியுடன் நீரைப் பாவிப்பதற்கு அதனைப் பேணி பரம்பல வகை வேலைப்பாடு செய்ய வேண்டும் என்பதும் ஆகும்.

## குறையுமுண்டு

இவ்வளவு சிறப்பு மிக்க நீருக்கும் ஒருகுறை வேண்டும் அல்லவா? கேலியாக'' நீரின் மேல் எழுத்து'' என்பது உறுதி சொல்லையும் நினைவில் வையாதிருப்பவற்றை ஒப்பிடுவது எல்லோருக்கும் தெரிந்ததே.

# பணிப்பாளர் அறிவிப்பு

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பாடசாலை மட்ட தமிழ்த்தின போட்டிகளை இம் மாதம் இறுதிக்குள் நடாத்துமாறு வலயக் கல்வி பணிப்பாளர் சி சிவராஜா அறிவித்துள்ளார்.

கோட்ட பட்டத்திலான போட்டிகளிற்கான விண்ணப்பத்தினை எதிர் வரும் 30ம் திகதிக்கு முன் கோட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ 23)

# அதிபர்களுக்கான கூட்டம்

(மந்திகை)

பருத்தித்துறை கல்விக் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி.ப 2 30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகக்கோட்டக் கல்வி அலுவலர் எஸ் புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (உ-23)

# சேவை நலன் பாராட்டு

(மந்திகை)

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் கி. கணேசனின் சேவைநலன் பாராட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில நடைபெற்ற நிகழ்விற்கு அதிபர் க. சுந்தரலிங்கம தலைமை வகித்தார். [உ-23]

# வறிய மாணவர்களுக்கு உதவி

(நெடுந்தீவு)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால், நெடுந்தீவுப பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட ஜே/01, ஜே/02 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு அண்மையில் சீருடைத்துணி, பாடசாலை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

மற்றைய பிரிவுகளுக்கு விரைவில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (உ-82)

# நிலக்கடலைச் செய்கை

[கல்வயல்]

நாவலிப பகுதியில் உள்ள வயல் நிலங்களில பெருமளவு நிலக்கடலை செய்கை பண்ணப்பட்டிருப்பதனை அவதானிகக முடிகிறது

இப்பகுதி மண் நிலக்கடலைச் செய்கைக்கு ஏற்றதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-111]

# நெசவு ஆடைகளை சந்தைப்படுத்த தொழில்துறைதிணைக்களம் ஏற்பாடு

(மந்திகை)

தொழிற்றுறை திணைக்களத்தின் மாவட்டச் செயலக நெசவுப் பயிற்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகள் காட்சியகமும் விற்பனை நிலையமும் அமைக்கப் படவுள்ளது.

இதற்காக பிரதேச செயலகங்களின் கீழ் இயங்கும் நெசவுக் கைத்தொழில் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளை அனுப்புமாறு மாவட்ட அலுவலர் கோரியுள்ளார்; மிக விரைவில் இந்நிலையத்தினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, பிரதேச செயலகங்களின் கீழ் இயங்கும் நெசவுப்பயிற்சி நிலையங்களில் நடைபெற்ற பயிற்சி வகுப்புக்கள் இடைநிறுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

# கைதிகள் விபரங்கள் பெறஏற்பாடு

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 70 தமிழர்கள் பற்றிய தகவல்களை உடனே கையளிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சித்திரவதைகளைத்தடுப்பது தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுஇவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளது. (உ-7)

# பார ஊர்திகள் செல்லும் பாதையில் மாற்றம் விரைவில் அமுல்

[மந்திகை]

பருத்தித்துறை இறங்கு துறையில் இருந்து பொருட்களை ஏற்றி இறக்கும் பார ஊர்திகள் இவ்வார இறுதிப் பகுதி முதல் மூன்றாம் குறுக்குத் தெருவினூடாகச்சென்று வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக சம்பந்தப்பட்ட நகர சபைத் தலைவர் வின்சன் கெனடி தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் நகரின் மையப்பகுதியில் தரித்துநின்று பொருட்களை ஏற்றி வந்தமையினால.

வீதிகளில ஏற்பட்ட அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இனிவரும காலங்களில் இறங்கு துறைக்கு வரும் பார ஊர்திகள் மூன்றாம குறுக்குத் தெருவினூடாக கடற்கரை வீதிக்குச் சென்று அப்பகுதியில் உள்ள நகர ஜர் கலை அரங்க மைதானத்தில தரித்து நின்று பொருட்களை ஏற்றிச் செல்லும் எனத்தெரிவிக்கப்படுகிறது. [உ 23]

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மே மாதம் 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 109787 ஏ | 109787 பி |
| 109787 சி | 109787 டி |
| 109787 ஈ | 178862 ஏ |
| 178862 பி | 181208 பி |
| 183158 ஏ | 185928 ஏ |
| 186168 ஏ | 186199 ஏ |
| 188811 ஏ | 188811 பி |
| 188811 சி | 188853 ஏ |
| 188995 ஏ | 189131 ஏ |
| 189148 ஏ | 189148 பி |
| 189148 சி | 189269 ஏ |
| 189269 பி | 189283 ஏ |
| 189623 ஏ | 189623 பி |
| 189623 சி | 189623 டி |
| 189623 ஈ | 189623எப் |
| 189623 ஜி | 189628 ஏ |
| 189650 ஏ | 189650 பி |
| 189662 ஏ | 189664 ஏ |
| 189668 ஏ | 189669 ஏ |
| 190097 ஏ | 190097 பி |
| 190097 சி | 190765 ஏ |
| 190773 ஏ | 190802 ஏ |
| 190802 பி | 190877 ஏ |
| 190897 ஏ | 190897 பி |
| 190940 ஏ | 190955 ஏ |
| 190955 பி | 190969 ஏ |
| 190969 பி | 190991 ஏ |
| 191026 ஏ | 191026 பி |
| 191026 சி | 191026 டி |
| 191032 ஏ | 191046 ஏ |
| 191080 ஏ | 191080 பி |
| 191090 ஏ | 191090 பி |
| 191092 ஏ | 191098 ஏ |
| 191101 ஏ | 191105 ஏ |
| 191108 ஏ | 191110 ஏ |
| 191115 ஏ | 191125 ஏ |
| 191125 பி | 191129 ஏ |
| 191129 பி | 191129 சி |
| 191129 டி | 191129 ஈ |
| 191129 எப் | 191131 ஏ |
| 191142 ஏ | 191142 பி |
| 191157 ஏ | 191159 ஏ |
| 191161 ஏ | 191161 பி |
| 191196 ஏ | 191208 ஏ |
| 191217 ஏ | 191226 ஏ |
| 191215 ஏ | 191238 ஏ |
| 193027 ஏ | 193055 ஏ |
| 193056 ஏ | 193130 ஏ |
| 193140 ஏ | 193141 ஏ |
| 193150 ஏ | 193152 ஏ |
| 193157 ஏ | 193158 ஏ |
| 193158 பி | 193177 ஏ |
| 193178 ஏ | 193179 ஏ |
| 193180 ஏ | 193181 ஏ |
| 193194 ஏ | 193218 ஏ |
| 193219 ஏ | 193233 ஏ |
| 193245 ஏ | 193254 ஏ |
| 193256 ஏ | 193276 ஏ |
| 193288 ஏ | 193292 ஏ |
| 193293 ஏ | 193303 ஏ |
| 193312 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 191206 ஏ | 192850 ஏ |
| 192850 பி | 193019 ஏ |
| 193028 ஏ | 193028 பி |
| 193028 சி | 193028 டி |
| 193037 ஏ | 193039 ஏ |
| 193091 ஏ | 193095 ஏ |
| 196095 பி | 193095 சி |
| 193095 டி | 193097 ஏ |
| 193097 பி | 193097 டி |
| 193108 ஏ | 193146 ஏ |
| 193146 பி | 193149 ஏ |
| 193172 ஏ | 193172 பி |
| 193192 ஏ | 193315 ஏ |

மே மாதம் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 178208 ஏ | 184556 ஏ |
| 189225 ஏ | 189272 ஏ |
| 189643 ஏ | 189643 பி |
| 189643 சி | 189643 டி |
| 189674 ஏ | 189674 பி |
| 189674 சி | 189674 டி |
| 190888 ஏ | 191130 ஏ |
| 191134 ஏ | 191134 பி |
| 191134 சி | 191134 டி |
| 191152 ஏ | 191171 ஏ |
| 191221 ஏ | 191221 பி |
| 191241 ஏ | 191241 பி |
| 191249 ஏ | 193101 ஏ |
| 193106 ஏ | 193124 ஏ |
| 193153 ஏ | 193196 ஏ |
| 193267 ஏ | 193310 ஏ |
| 193331 ஏ | 193335 ஏ |
| 193343 ஏ | 193352 ஏ |
| 193373 ஏ | 193401 ஏ |
| 193402 ஏ | 193420 ஏ |
| 193437 ஏ | 193453 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 159143 ஏ | 159143 பி |
| 159143 சி | 159143 டி |
| 175577 ஏ | 175577 பி |
| 175577 சி | 181985 ஏ |
| 188860 ஏ | 189064 ஏ |
| 190834 ஏ | 190974 பி |
| 191012 ஏ | 191012 பி |
| 191076 ஏ | 191076 பி |
| 191076 சி | 191103 ஏ |
| 191103 பி | 191166 ஏ |
| 191166 பி | 191184 ஏ |
| 191184 பி | 191185 ஏ |
| 181185 பி | 191185 சி |
| 191231 ஏ | 191231 பி |
| 193037 ஏ | 193037 பி |
| 193134 ஏ | 193135 ஏ |
| 193175 ஏ | 193176 ஏ |
| 193176 பி | 193248 ஏ |
| 193248 பி | 193382 ஏ |
| 1 3438 ஏ | 193438 பி |
| 199267 ஏ | 199267 பி |
| 199267 சி | |

# மண்டைதீவில் மக்கள் குடியமர ஏற்றநடவடிக்கை எடுப்பதெனஉறுதி

## படைத்தரப்பினால் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுமக்கள், தமது வீடுகளைச் சென்று பார்வையிடவும், விரும்பின் அங்குகுடியேறவும் ஏற்ற சாதக நிலைமை விரைவில் ஏற்படுத்தப்படும் என படைத்தரப்பினரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்திச் சேவையில் கலந்துகொண்டு மக்கள் குறைகளைக் கேட்டறிந்த முப்படை அதிகாரிகள் இவ்வுறுதிப்பாட்டை சம்பந்தப்பட்ட மக்களிடம் வழங்கினர்.

சனி, ஞாயிறு தினங்களில் யாழ் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்திச் சேவையில் முப்படைகளினதும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கடற்படை, தரைப்படை தவிர விமானப்படையினரை பொதுமக்கள் குறை நிவர்த்தியின் பொருட்டு நாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நூற்றுக்கணக்கான மண்டைதீவு மக்கள் ஒன்றுகூடி தமது பகுதியில் நிலைகொண்டுள்ள படைகளை அகற்றி, அங்கு மீளக் குடியேற ஏற்ற வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என கோரியதுடன்,

படைகளின் பாவனையிலுள்ள தம் வீடுகளுக்கு வாடகை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தியமையையடுத்து,

படையினரின் பாவனையிலுள்ள வீடுகள் குறித்த விபரம் திரட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

சிஹல உறுமயக் கட்சியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக ரணபக்ச இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

திலக் கருணாரட்ண தனது பதவியைஇராஜினாமாச்செய்ததையடுத்து கட்சியின் தேசிய அமைப்பாளரான ரணபக்ச இப் பதவியை ஏற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## வருடாந்த மஹோற்சவம்

(ஏழாலை)

மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 4 ஆம் திகதி இரதோற்சவமும் 5 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ-12)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நாளை புதன்கிழமை மு.ப.10.மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் தொழிற்றுறைத்திணைக்களப் பணிப்பாளருடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதால் மேற்படி திணைக்களத்தைச் சேர்ந்த அனைத்து போதனாசிரியர்கள், மேற்பார்வையாளர்களையும் அதில் பங்கு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (உ-15)

# பொலிஸார் மூவர் கைது இலஞ்சம் பெற்றனராம்

(கொழும்பு)

குருநாகல் மாவட்ட பொலிஸ் நிலையம் ஒன்றைச் சேர்ந்த மூன்று பொலிஸார்கள் 25 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றார்கள்என்ற சந்தேகத்தின் பேரில் லஞ்சத்தடுப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி நோட்டுதொடர்பாக குடும்பப் பெண்ணிடம் இருந்து லஞ்சம் பெற்றமை உறுதிப்படுத்தப் பட்டதை அடுத்து அண்மையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பெண் பொலிஸார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த18ஆம் திகதி கொழும்பு அரசலுவல் எழுதுவினைஞர் ஒருவர் 200 ரூபா லஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (உ-5)

# சிவனொளிபாத மலையடிவாரத்தில் பொலிஸ்நிலையம்அமைப்பு

(கொழும்பு)

சிவனொளிபாத மலையின் அடிவாரத்தில் புதியபொலிஸ் நிலையம்ஒன்றுஅமைக்கப்பட்டுள்ளது.

நல்ல தண்ணீர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையம யாத்திரைக் காலத்தில் மட்டுமே பக்தர்களின் பாதுகாப்புக்கருதி சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று, மலைக்குச் செல்லும் வழியில் ஆசி ஆறு, ஊசி மலை போன்ற பகுதிகளிலும் தற்காலிகப் பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. [உ-7]

# காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம)

1996 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடாத்தி

கரன்(பி- 66) முறைப்பாடு- செல்லத்துரை கணேசலிங்கம் தைதடிதெற்கு.

அழைக்கப்பட்ட கிராம அலுவலர்.(ஜே/297)

# பத்திரிகையாளர்களுக்கு விசேட கொடுப்பனவு

### கோப்பாய்

| | |
|---|---|
| 191021 ஏ | 191034 ஏ |
| 193232 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 175662 ஏ | 175662 பி |
| 175671 ஏ | 179792 ஏ |
| 179792 பி | |
| 183013 ஏ | 184517 ஏ |
| 186306 ஏ | 187272 ஏ |
| 189072 ஏ | 189171 ஏ |
| 189228 ஏ | 189228 பி |
| 189228 சி | 189256 ஏ |
| 189252 பி | 189252 சி |
| 189252 டி | 189627 ஏ |
| 189627 பி | 190819 ஏ |
| 190855 ஏ | 190855 பி |
| 190855 சி | 190958 ஏ |
| 190995 ஏ | 190995 பி |
| 190998 ஏ | 190998 பி |
| 190998 சி | 191016 ஏ |
| 191016 பி | 191028 ஏ |
| 191028 பி | 191040 ஏ |
| 191070 ஏ | 191075 ஏ |
| 191075 பி | 191075 சி |
| 191075 டி | 191081 ஏ |
| 91097 சி | 1911147ஏ |
| 191136 ஏ | 191136 பி |
| 191136 சி | 191138 ஏ |
| 191144 ஏ | 191144 பி |
| 191150 ஏ | 191150 பி |
| 191150 சி | 191162 ஏ |
| 191162 பி | 191165 ஏ |
| 191165 பி | 191180 ஏ |
| 191180 பி | 191187 ஏ |
| 191188 ஏ | 191188 பி |
| 191197 ஏ | 191197 பி |

# விசேட கொடுப்பனவு வழங்குமாறு கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க வேண்டுமென யாழ்ப்பாண ஊடகவியாலளர் சங்கம் கோரியுள்ளது.

இது குறித்து யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ்இற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில,

பல்வேறு நெருக்கடிகள்அச்சுறுத்தல்களிற்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகையாளர்கள் தமது பணியை ஆற்றி வருகிறார்கள்.

தென்பகுதியில் உள்ள பத்திரிகையாளர்களிற்கு கிடைக்கும் எந்தவொரு வசதி வாய்ப்பும் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்குக் கிடைப்பதில்லை.

இவை ஒருபுறமிருக்க தென்பகுதியில் உள்ள பத்திரிகையாளர்கள் மாநகரசபைக்கூட்டத்தில் பங்குபற்றினால் ஒவ்வொரு செய்தி நிறுவனத்தில் இருந்தும் ஒவ்வொருவருக்கும் விசேட கொடுப்பனவுமாநகர சபையால் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகையாளர்களில் ஒவ்வொரு செய்தி நிறுவனத்தில் இருந்தும்ஒவ்வொருவருக்கும் 500ரூபா விசேடகொடுப்பனவு வழங்கவேண்டும்என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-43)

# தமிழ்ச்செல்வன் மீது தாக்குதல் முயற்சி பல்கலைமாணவர்கண்டனம்

(வடமராட்சி கிழக்கு)

நாட்டில் சமாதானம் ஏற்படுவதை விரும்பாத விஷமிகளே தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மீது தாக்குதல் முயற்சியை மேற்கொண்டனர்.

இச் செயற்பாடு சமாதானத்தை குழப்பும் வகையிலானதும் கவலைக்கும் கண்டனத்துக்கும் உரியதாகும் என கடந்த 16 ஆம் திகதி நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்முடன சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபடச்சென்றவேளை, சு.ப. தமிழ்ச்செல்வன் சென்ற வாகனத் தொடர் அணிமீது தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்து யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை நழுவ விடாது அதனை இறுகப்பற்றிக் கொள்ள வேண்டும் என அரசை நாம் கோருகிறோம் என்று மேலும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுளளது.

(உ-43)

போனோர் தொடர்பான விசாரணைகளை நடாத்தி வரும் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கீழ் வருவோர் சம்பந்தமாக பின் வரும் சாட்சிகளை அழைத்துள்ளனர்.

★ பரமநாதன் நடேஸ்வரன் (பி-6) முறைப்பாடு- பரமநாதன் பூர்ணமி வட்டுக்கோட்டை, சித்தங்கேணி.

★ கணேசலிங்கம் கிருபா அழைக்கப்பட்ட கிராம அலுவலர்.(ஜே/297)

★ தம்பிப்பிள்ளைகோவிந்தசாமி முறைப்பாடு-கோவிந்தசாமி தனலட்சுமி.

இல: 250, அராலி வீதி, சங்கானை.

சாட்சிகள்:- சிவசுப்பிரமணியம்சுரேந்திரன், தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

★ சின்னத்தம்பி கோபாலகிருஷ்ணன் (பி-77)

முறைப்பாடு:- சங்கரன் சின்னாச்சி கைதடி தெற்கு, நாவற்குழி.

சாட்சிகள்:- பரமேஸ்வரன் சிவபாலன் செல்வராணி.

★ தவராசா அகிலராசன் (ஏ-12) முறைப்பாடு:- கந்தையா நடராசா, இல.194, இராமநாதன்வீதி, திருநெல்வேலி.

சாட்சி:- நளராசசா கந்தம்மா திருநெல்வேலி.

★ சின்னத்துரை கதிரவேற்பிள்ளை (பி-84 முறைப்பாடு:- தவராசா பரமேஸ்வரி கப்பூது கரவெட்டி, நெல்லியடி. (உ-6)

# கார்த்திகைத் திருவிழா

அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று பி.ப 4.00 மணிக்கு கார்த்திகைத் திருவிழா இடம் பெறவுள்ளது.

(உ)

### இன்று ஒரு தகவல்

## விதியை வென்ற உழவன்

முன்னொரு காலத்தில் அரசன் ஒருவன் வீரர்கள் சிலருடன் வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குச் சென்றான். வழியில் ஒரு மரத்திலிருந்த பறவை இறக்கைகளை அடித்துக் கொண்டு ஏதோ கத்தியது. உடனே அரசன் சகுனம் பார்ப்பதிலும், பறவைகளின் மொழி அறிவதிலும் தேர்ச்சி பெற்ற வீரர் ஒருவனை அழைத்து 'அந்தப் பறவை என்ன சொல்கிறது?' என்று கேட்டான். அதற்கு அந்த வீரன் 'அரசே! பறவை நம்மைப்பற்றி ஏதும் சொல்லவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் புல் வெட்டுவதற்காக இங்கு வரும் உழவன் ஒருவன் பாம்பு கடித்து இறந்து விடுவான் என்று சொன்னது' என்றான்.

அவன் சொல்லி வாய் மூடவில்லை, கையில் புல் அறுக்கும் அரிவாளுடன் ஒருவன் அவ்வழியே சென்றான். அவனைக் கண்ட அரசன் பறவை சொன்னபடி நடக்கிறதா என்பதை அறிய ஆவல் கொண்டான். அதனால் தன் வீரர்களுடன் அங்கேயே தங்கியிருந்தான். மாலை நேரமாயிற்று. தொலைவில் தலையில் புல்கட்டுடன் மெதுவாகத் திரும்பி வந்துகொண்டிருந்தான் அந்த உழவன்.

உடனே அரசன் சகுனம் சொன்ன வீரனைப் பார்த்து 'நீ சொன்னது என்ன வாயிற்று? இவனைப் பாம்பு கடிக்க மறந்து விட்டதா? இல்லை இவன் எமனை ஏமாற்றி விட்டானா? இவன் எப்படிச் சாவிலிருந்து தப்பித்தான். என்பதை நீ எனக்கு விளக்க வேண்டும்' என்று கோபத்துடன் கேட்டான். அரசே! அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வர வேண்டாம். அந்தப்பறவை சொன்னபடிதான் நடந்திருக்க வேண்டும். இடையில் என்ன நடந்தது என்று புரியவில்லை' என்று சொன்னான்.

தலையில் புல்கட்டுடன் வந்த உழவன் அவர்கள் அருகில் வந்தான். புல் கட்டில் அரிவாள் சொருகப்பட்டிருந்தது. புல் கட்டைக் கீழே போடும் படி சொன்னான் அந்த வீரன். உழவனும் அப்படியே செய்தான். புல் கட்டுக் கீழே விழ்ந்தவுடன் அதைக் கட்டியிருந்த கயிறு அறுந்து விட்டது. உள்ளே அரிவாளால் வெட்டப்பட்டு பாம்பு இறந்துகிடந்தது தெரிந்தது. எல்லோரும் வியப்பு அடைந்தனர்.

'அரசே! பாம்பு இவனைக் கொல்வதற்காக வந்து இருக்கிறது. ஆனால் அது இறந்து விட்டது. எனக்குக் காரணம் தெரியவில்லை. எதற்கும் அந்த உழவனிடம் கேட்கிறேன்' என்றான் வீரன்.

பிறகு உழவனைப் பார்த்து 'நீ புல் வெட்டச் சென்றதிலிருந்து ஏதேனும் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி நடந்ததா?' என்று கேட்டான். அதற்கு உழவன் 'வழியில் ஒரு முதியவர் வந்தார். அவரை நான் வணங்கினேன் அவர் 'நீடுழி வாழ்க!' என்று என்னை வாழ்த்தினார். அது தான் நடந்தது. வேறொன்றும் இல்லை' என்று சொல்லி விட்டுத் தன் வழியே சென்றான்.

அதைக் கேட்ட வீரன் 'அரசே! இப்பொழுது உண்மை தெரிந்து விட்டது. அந்த முதியவரின் வாழ்த்தினால் தான் இவன் இன்று சாவிலிருந்து தப்பித்துக் கொண்டான். உயர்ந்த சான்றோர்களின் சொற்கள் பிரமன் எழுதிய தலைஎழுத்தைக்கூட மாற்றவல்லவை' என்று விளக்கம் தந்தான்.

**பேராசிரியர் எ. சோதி**

## மருதபுர மக்கள் நலன் கருதி ச. சமூக நிலையம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

காரை நகர் மருதபுர கிராம மக்களின் நலன்களினைக் கருத்திற்கொண்டு புதிய சனசமூக நிலைய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் 50 ஆயிரம் ரூபா செலவில் இச் சனசமூக நிலையம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-75)

## செயற்கைக்கால் பொருத்த 11 ஆயிரம் ரூபா செலவு

(யாழ்ப்பாணம்)

மிதிவெடியில் அல்லது வேறு விதத்தில் காலை இழந்த ஒருவருக்கு செயற்கைக்கால் ஒன்றைப் பொருத்த சுமார் 11 ஆயிரம் ரூபாவரை செலவாகின்றதாக ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறுவர் முதல் பெரியோர் வரை வயது வேறுபாடின்றி அனைவருக்கும் ஒரே தொகையே செயற்கைக்கால் பொருத்தச் செலவாகின்றது டன் இதற்கான செலவை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஏற்றுவருகின்றதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, செயற்கைக் கால் தயாரிப்புக்கு வேண்டிய உதிரிப்பாகங்கள் சில யாழ்ப்பாணத்திலேயே தயாரிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-124)

## விசாரணைக் குழுவுக்கு பதிலளிக்க மறுப்பு!

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்ட விசாரணைக் குழுவின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாதென்று காணி விவசாய அமைச்சர் டீ. எம் ஜயரத்தினா அதிருப்தி தெரிவித்துள்ளார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் அமைச்சர் ஜயரத்தினவுக்கும் அனுருத்தரத்வத்தைக்குமிடையே முறுகல் நிலை காணப்பட்டது.

இம்முறுகல் நிலைஏன்ஏற்பட்டதென்பது குறித்தும் இருவரையும் சமரசப்படுத்தவும் ஜனாதிபதியால் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப் பட்டது. அவ்விசாரணைக் குழுவின் கேள்விகளுக்கே பதிலளிக்க முடியாதென்று அமைச்சர் ஜயரத்தினா தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஓய்வுபெற்ற நீதியரசர் முன்னிலையிலான ஆணைக் குழுவிலேயே மேற்படி விடயம் குறித்து தெரிவிக்க முடியுமென்று ஜயரத்தினா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் ஜயரத்தினாவுக்கும் அமைச்சர் அனுருத்தரத்வத்தைக்கும் இடையிலான முறுகல்நிலை தற்பொழுதும் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# அரசு யுத்த முனைப்புகளில் தீவிரம் இந்திய-அமெ. அரசுகள் காரணம்

## குற்றம் சாட்டுகிறார் செந்தில்வேல்

(வடமராட்சி கிழக்கு)

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை விடயத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கை அரசின் நிலைப்பாட்டிற்கு முண்டுகொடுத்து அதன் கொள்கைகளை அங்கீகரிப்பதால் அரசு யுத்த முன்னெடுப்புக்களில் தீவிரம் காட்டிவருகின்றது.

ஞாயிற்றுக்கிழமை சிற்றி ஹோலில் இடம் பெற்ற புதிய ஜனநாயகக் கட்சியின் 23 வது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட மாநாட்டில் கட்சியின் செயலாளர் செந்தில்வேல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

1915 ஆம்ஆண்டில்இருந்து இன்றுவரை சிங்கள ஆட்சியாளர்கள் இனவாதப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர்.

தற்போது இந்தியா சிஹல உறுமயவிற்கு நிதி உதவி வழங்கி அதன் இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகளை ஊக்குவித்து வருகின்றது.

இதன் காரணமாக ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவின் மீது இருந்த நம்பிக்கை தளர்ந்து வருகிறது எனக் குறிப்பிட்டார். (உ-43)

## சிரமதானம்

(இணுவில்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த அபிவிருத்தித் தொண்டர்களால், மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானம், பிரதேச செயலக வளவு ஆகியன சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டன. (உ 49)

## சோளம்விதை விநியோகம்

(இணுவில்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு விவசாய சம்மேளனத்தினால் அப்பகுதி விவசாயிகளுக்கு சோளம்விதை விநியோகிக்கப்படவுள்ளது.

சோளம் விதை பெறவிரும்புபவர்களை உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (உ-49)

## விளையாட்டுப் போட்டி

(ஏழாலை)

தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவுடன், அளவெட்டி கணேஸ்வரம் ஐக்கிய வாலிப சனசமூக நிலைய முன்பள்ளிவிளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு நிலையத்தலைவர் இ ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-12)

## திருமலையில் சுற்றிவளைப்பு

(திருமலை)

திருமலை நகர்ப்பகுதி நேற்றுமுன்தினம் திடீர் சுற்றிவளைப்பிற்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சுற்றிவளைப்பில் பெருந்தொகை இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனா.

வீதியில் போவோர் வருவோர் அந்தந்த இடங்களில் தடுத்து நிறுத்தப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இதன்போது பலர் கைது செய்யப்பட்டதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு நீதவான் முகாம், பிள்ளையார் முகாம், சபாபதிப்பிள்ளை முகாம் ஆகியவற்றித் தங்கியுள்ள பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்டோர், ஊனமுற்றோர், மற்றும் விதவைகளுக்கு கடந்த சனிக்கிழமையாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற குறை நிவர்த்திச் சேவையின் போது நிதி உதவி செய்யப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்நிதியை சம்பந்தப்பட்டவர்களிடம் வழங்கினார். (உ-10)

## யானை தாக்கியதில் முதியவர் படுகாயம்

(வவுனியா)

முல்லைத்தீவு கன்னிமுறிப்பு பகுதியில்யானை தாக்கியதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு கைவேலியைச் சேர்ந்த ரி மயில்வாகனம் என்பவரே படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (உ 5)

## ஆயிரக் கணக்கான கடவுச் சீட்டு விண்ணப்ப படிவங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சனி, ஞாயிறு தினங்களில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற குறை நிவர்த்திச் சேவையின் போது, ஆயிரத்துக்கும் அதிகமான கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

விநியோகிக்கப்பட்டவற்றில் 300 படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டுமீள ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், கூடிய விரைவில் தபால் மூலம் உரியவர்களுக்கு கடவுச்சீட்டுகள் அனுப்பி வைக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரி சலீம தெரிவித்தார்.

இதேவேளை குறிப்பிடத்தக்களவு விண்ணப்பங்கள் கடவுச் சீட்டைப புதுப்பிப்பதற்காக வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார் (உ-10)

## மதிய உணவு வழங்கும் திட்டம் நடைமுறை

(கொழும்பு)

கல்வி அமைச்சு மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டத்தைநடைமுறைப் படுத்தவுள்ளது.

சோறு, பருப்பு, முட்டை, பயறு, மரக்கறி, மற்றும்கீரை வகைகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கபபடவுள்ளது.

இராகிரியவில் அமைந்துள்ள தேவாவித்தாரண மகாவித்தியாலயத்தில் முதன் முதல் இத் திட்டம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (உ-7)

## பாண் உற்பத்தி நிலையம் இயங்க தடைவிதிப்பு

[சுழிபுரம்]

சுழிபுரம பொதுசுகாதாரப் பரிசோதகர் பிரிவில் பாண் உற்பத்தி நிலையம் ஒன்றுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் மேற்படி பிரிவு பொதுச் சுகாதாரப பரிசோதகர் வே ரதீசனால் இரு பாண் உற்பத்தி நிலையங்களுக்கு எதிராகமல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதற்கிணங்க நீதவானால் இத்தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மற்றைய நபர் வழக்கிற்கு சமுகம் கொடுக்கத் தவறியதால் பிடி விறந்து பிறபிக்கப்பட்டுள்ளது (உ-ப-10)

## தொலைபேசிக்கான புதிய இணைப்புகள் டிசம்பரில் சாத்தியம்

(யாழ்ப்பாணம்)

பண்ணையில் அமைக்கப் பட்டுவரும் தொலைத் தொடர்புக் கோபுரவேலைகள் நவம்பர் மாதம் அளவிலேயே பூரணமாக முடிவடையும்.

அண்மையில் இடம்பெற்ற குறைகேள் செயலமர்வின் போது, தொலைத்தொடர்புகள் அமைச்சகத்தில் இருந்து கலந்துகொண்ட அதிகாரிகளால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே தொலைபேசி இணைப்புபெற விண்ணப்பித்தபலருக்கு கோபுரவேலைகள்முடிவுற்றதும் டிசெம்பர் மாதமளவில் இணைப்புவழங்கப்படும் எனவும்,

கொழும்பில் இருந்து கோபுர அமைப்புக்கு சில முக்கிய உதிரிப்பாகங்கள் எடுத்துவர வேண்டி இருப்பதாகவும் அவ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை,

தொலைத்தொடர்பு இணைப்பு பல்வேறு பிரச்சினைகளுக்கு இச் செயலமர்வில் தீர்வளிததகாகவும் குறிபபிட்டனர் (உ.10)

## நியமனக் கடிதம்

(இணுவில்

வலிகாமம வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் கடமையாற்றி வந்த 22 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு அண்மையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (உ-49)

## பாரதிய ஜனதா ஆட்சியில்
# இந்திய நாடு வீழ்ச்சிப் பாதையில்
### அமைச்சர் சுட்டிக்காட்டு

(புதுடில்லி)

நாட்டின் பாதுகாப்பை பாரதிய ஜனதாக் கட்சி விட்டுக் கொடுத்து விட்டதென்று முன்னாள் அமைச்சர் நட்வர் சிங் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடந்த காங்கிரஸ் கட்சியின் பேரணி ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில், நாட்டின் எல்லையை விட்டுக் கொடுத்ததுடன் பொருளாதாரத்துறையும் பின்னடைந்து விட்டதென குற்றம் சாட்டினார்.

அப்பேரணியில்பேசிய காங்கிரஸ் தலைவர்கள் அண்மையில் நடந்த மாநில தேர்தல்களில் பாரதிய ஜனதாக் கட்சி தோல்வி அடைந்ததால் பிரதமர் வாஜ்பாய் உடனடியாகப் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று தெரிவித்தார்.

(து)

## பிரேசில் சிறைச்சாலையில்
# ஆயுதக்குழு அதிரடி நடவடிக்கை 27 கைதிகள் மீட்கப்பட்டனர்

[பிறேஸிலியா]

பிறேஸிலில் உள்ள ஜவுப்போலோ சிறையை முற்றுகையிட்ட ஆயுதக் கும்பல் இருபத்தேழு கைதிகளை விடுவித்துச் சென்றுள்ளனர்.

பகல் வேளையில் சிறையில் உணவு பரிமாறும் பொழுதே ஆயுததாரிகள் உட்சென்று சிறைக்காவலர்களைத் தாக்கிவிட்டு இருபத்தேழு பேரையும் விடுவித்தார்கள்.

கைதிகளை ஹெலிக்கொப்டர் மூலமாகவும் வாகனங்கள் மூலமும் மீட்டுச்சென்றார்கள்.

உலக தரிசனம்

வாகனம் மூலம் தப்பிச் சென்றவர்களை இருபத்தைந்துக்கு மேற்பட்ட கார்கள் ஜீப்புகள் துரத்திச் சென்றதில் நால்வர் மட்டும் பிடிபட்டனர்.

ஜவுப்போலோ சிறையில் மொத்தமாக 796 சிறைக் கைதிகள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[து]

## தமிழ் நாட்டில்
# தண்ணீர்ப் பஞ்சம் தீர்ப்பாரா ஜெயா?

(சென்னை)

ஜெயலலிதா பதவியேற்றதும் கிருஷ்ணா நதி நீர் நிறுத்தப்பட்டுவிட்டது.

இதனால் சென்னையிலே தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணா ஆற்றிலே நீர் வற்றிவிட்டது என்று ஆந்திரா கைவிரித்துவிட்டது.

சென்னையில் மட்டுமல்ல தமிழகமெங்கும் தண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னுரிமையளிக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

(து)

# உல்லாசப் பயணிகளுக்கு விஸாவழங்குவதில்சலுகை

[புதுடில்லி]

பத்து நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளுக்கு விஸா வழங்குவதில் சலுகைகளை வழங்கவுள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட அந்த பத்து நாட்டு உல்லாசப்பயணிகளும் இந்தியாவிலுள்ள விமான நிலையத்தில வந்திறங்கியவுடன் முப்பது அமெரிக்க டொலர்களைச் செலுத்தி தொண்ணூறுநாட்களுக்கான விஸாவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தப் பத்து நாடுகளின் பெயர்கள் இன்னும் வெளிவரவில்லையாயினும் இந்தியாவின் உல்லாசப் பயணத்துறையினர் 16 நாடுகளின் பெயர்களைச் சிபார்சு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால் வருடாந்தம் தென்னாசிய, ஐரோப்பிய நாட்டு உல்லாசப் பயணிகளைக் கவர முடியும் எனக் கருதப்படுகிறது. (து)

# கனடாவில் குடியகல்வு சட்டம் மறுபரிசீலனை

(ரொறன்ரோ)

பயங்கரவாத சந்தேக நபர்கள் தங்கள சொந்த நாடுகளுக்கு அனுப்பப்பட்டால் அங்கு சித்திரவதை செய்யப் படுவார்கள் என்பதனால் அவர்களை நாடுகடத்தும் தீர்மானம்பற்றி கனடா இவ்வாரம் ஆராயவுள்ளது.

கனடாவில் புகலிடம் கோரியுள்ள இலங்கையைச் சேர்ந்த சுரேஸ் மாணிக்கவாசகம் மற்றும் ஈரானிய மன்சூர் அகானி ஆகியோரின் விடயங்களைக் கருத்திற் கொண்டே தனது நாடு கடத்தும் தீர்மானம் பற்றி கனடா ஆராயவுள்ளது.

தாம் இருவரும் தமது சொந்த நாடுகளுக்குச் சென்றால் கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவோம் என்று அவர்கள் வேண்டிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

(உ-7)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல - 10

முழுப்பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

பிறந்த திகதி: ____________________

போட்டியாளர் கையொப்பம்: ____________________

பெற்ற புள்ளிகள்: ____________

25-05-2001க்கு முன் உலகதரிசன விடைகளை பத்திரத்துடன் அனுப்பி வைக்கவும்.

## பரிசோதனைக் குழாய் குதிரைக்குட்டி

(லண்டன்)

ஐக்கிய இராச்சியத்தின் நெயமாக்கெற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஐரோப்பாவின் முதலாவது பரிசோதனைக் குழாய்க்குதிரைக் குட்டியை உருவாக்கியுள்ளனர்.

(உ-5)

## 8 பேர் பதவியிழப்பு

(சிங்கப்பூர)

தாய்லாந்து நாடாளுமன்றத்தில் 7 அங்கத்தவர்கள் பதவியிழந்துள்ளார்கள்.

அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது இலஞ்ச ஊழலகளில் ஈடுபட்டதாக எதிர்க்கட்சியினரால் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் இவர்கள் பதவியிழந்துள்ளார்கள்.

வாக்காளர்களுக்கு காசு கொடுத்து வாக்குகள் சேகரித்தார்கள் என்பது நிரூபிக்கப்பட்டதையடுத்து இந்த ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி இழக்க வேண்டிவந்துள்ளது. (து)

## அமெரிக்கா தடை

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்திற்கு எதிராக எவ்-16 ரக விமானத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று அமெரிக்கா இஸ்ரேலை வற்புறுத்தியுள்ளது.

அமெரிக்கா ஏற்கனவே இஸ்ரேலுக்கு விற்ற மேற்படி ரக விமானங்கள்பலஸ்தீனர்களை அழிப்பதற்கோ அவர்களின் உடமைகளை அழிப்பதற்கோ பயன்படுத்தக்கூடாதுஎன்றும் அமெரிக்கா கேட்டுள்ளது.

(து)

# பெண்கள் நடத்திய பேக்கரிகளுக்கு மூடுவிழா

(காபூல்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஆப்கானிஸ்தானில் பெண்களால் நடத்தப்பட்டு வந்த சில பேக்கரிகளை தலிபான்இயக்கப்பொலிஸார் மூடியுள்ளனர்.

தலைநகரான காபூலில் இயங்கிவந்த இந்த பேக்கரிகளில் உற்பத்தியாகும் பாண்களை குறைந்த விலையில் மக்களுக்கு விற்பனை செய்துள்ளனர்.

இதன் காரணமாக, ஆப்கானிஸ்தானில் பெண்கள் எந்தவித தொழிலிலும் ஈடுபடக் கூடாது, எந்தப் பொருட்களையும் விலை குறைவாக விற்கக் கூடாது என பொலிஸார் சட்டம் பிறப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

# இத்தாலி திரைப்படத்திற்கு சர்வதேச விருது

(லண்டன்)

உலகப் புகழ்பெற்ற 'ஹான்' திரைப்பட விழாவில் இத்தாலிய இயக்குநர் ஒருவரின் 'தசன்ஸ் ரோங்' என்ற திரைப்படத்திற்கு சர்வதேச விருது கிடைத்துள்ளது.

1978 ஆண்டுக்குப் பின்னர் ஐரோப்பாவின் முன்னணித் திரைப்படப் போட்டிகளின் சிறப்பு விருதினை ஒரு இத்தாலிய திரைப்படம் பெறுவது இதுவே முதல்தடவையாகும்.

இயக்குநர் 'நன்னிமராஜ்' சின் இத்திரைப்படத்தில் ஒரு சிறுவனின் மரணத்தினால் மத்தியதரக் குடும்பம்ஒன்று எவ்வாறு பிளவுபடுகிறது என்பதை மிகவும் தத்ரூபமாக சித்திரித்துக் காட்டப்படுகிறது. (உ-7)

## முக்கிய முடிவுகளை எடுக்க
# இந்தோ அமைச்சரவை அவசரமாக கூடுகிறது

[ஜகார்த்தா]

இந்தோனேஷிய அமைச்சரவை இன்று அவசரமாககூடுக்கிறது.

நாடாளுமன்றத்தில்அதிபர் அப்துல் ரகுமான் வாஹிட் மீது ஊழல் சம்பந்தமாக கொண்டு வரப்பட இருக்கும் நம்பிக்கையில்லாத்தீர்மானம் பற்றியும் உப அதிபர்மேகவதி சுகர்ணோ புத்ரியின் அதிகாரங்கள் பற்றியும். இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவிருக்கின்றன.

இதேவேளைசுகர்ணோபுத்ரி பெரிய செல்வந்தரென்றும் அவரின் சொத்துக்கள் பற்றியும் சந்தேகங்கள் வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# பொருளாதார ரீதியில் அமெ. பின்தள்ளப்படும்
### பொருளியல் நிபுணர் எச்சரிக்கை

(நியூயோர்க்)

அடுத்த இருபத்தைந்து வருடங்களில் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளை பொருளாதார ரீதியில் முந்திக்கொண்டு இந்தியாவும் சீனாவும் வருமென்று பொருளாதார நிபுணரொருவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய பொருளாதார வல்லுநர் சோசிட்யாவா பூச்சி மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலை நீடிக்குமாயின் சீனா மிகவிரைவில் அமெரிக்காவை பொருளாதாரத்தில்முந்திவிடுமென்றும்,

இதேவேளை இந்தியா, ஜப்பான், ஜேர்மனி போன்றநாடுகளை முந்திவிடுமென்றும் தெரிவித்தார். (து)


## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

★ ஒப்புநோக்குநர்
(ஆண்கள் மட்டும், இரவு நேரம்)
உயர்தரம் சித்தி, முன் அனுபவம்

★ உதவி ஆசிரியர்கள்
(ஆண்கள் மட்டும், இரவுக்கடமை)
உயர்தரம் சித்தி, பத்திரிகைத்துறையனுபவம்

★ அலுவலகச் செய்தியாளர்
(ஆண்கள் மட்டும்)
உயர்தரம் சித்தி, பத்திரிகைத்துறையனுபவம்

★ பாதுகாப்பு உத்தியோகத்தர்
(பகுதி நேரம்)

★ சிற்றூழியர்

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் முழுப் பெயர், விண்ணப்பிக்கும் பதவி, வயது, கல்வித் தகைமை, முகவரி உள்ளிட்ட விபரங்களுடன் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 25-5-2001க்கு முன் கிடைக்கக்கூடியதாக,

ஆளணி முகாமையாளர்,
**வலம்புரி**
இல: 15, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்;
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நிர்வாகம்

இன்சொலால் ஈத்தளித்த வல்லார்க்குத் தன் சொலால் தான் கண்டனைத்(து) -இவ்வுலகு

- குறள்

வலம்புரி

## புதிய புராணம்

யமலோகத்திற்கு ஒரே நேரத்தில் இலங்கைத் திருநாட்டின் தமிழ் மைந்தர்களான மூவர் சென்றனர். அங்கு ஏற்கனவே மரண விசாவில் சென்ற பல்வேறு நாட்டைச்சேர்ந்தவர்களை யமதர்மராஜன் விசாரணை நடத்தி அவரவர் செய்த பாவ புண்ணியத்தின் மொத்தப் புள்ளிகளுக்கமைய (நம்நாட்டு பல்கலைக்கழக அனுமதிபோல்) நரகங்களும், சொர்க்கங்களும் பிரித்து வழங்கிக் கொண்டிருந்தார்.

இச் சந்தர்ப்பத்தில் யமலோகத் தூதர்கள் யமதர்மா ஆபத்து ஆபத்து என்றுகத்தினர். என்ன? யாரால் ஆபத்து என்று கேட்டான் யமன். சுவாமி இலங்கைத் தமிழர் மூவர் நம் லோகத்திற்கு வருகிறார்கள் என்றனர் தூதர்கள்.

எங்கே காவலர்கள் மூவரையும் கடுமையாகச் செக்பண்ணி விட்டு உள்ளே அழைத்து வாருங்கள் எனக்கட்டளையிட்டான் யமன். அப்படியே காவலர்களும் செய்தனர்.

சித்திரகுப்தா இம் மூவர்களும் செய்த பாவம் என்ன? சுவாமி இம் மூவரும் இணைபிரியாத நண்பர்கள் அது மட்டுமன்றி நரிப்புத்தியுடையவர்கள்,

இவர்களை ஈழத் தமிழர்கள் நியாயமற்ற முறையில் தண்டித்துள்ளனர் என்றான் சித்திரகுப்தன். அப்படியா? இதற்கு நல்ல தண்டனை வழங்க வேண்டும். சித்திரகுப்தா இவர்கள் செய்த பாவ புண்ணியங்களை ஆராய்ந்து அதற்கேற்ற வகையில் இலங்கையில் மீண்டும் இவர்களைத் தமிழர்களாகப் பிறக்கச் செய்துஏக காலத்தில் தமிழ் எம்.பிக்களாக வருவார்களென எழுது விதி என்றான் யமன்.

சுவாமி இவர்களும் எம்.பிக்களா? தயங்கினான் சித்திரகுப்தன்.

சித்திரகுப்தா கவலைப் படாதே இம் மூவரும் எம்.பிக்களாகச் சென்று ஒருவரோடு ஒருவர் சண்டையிடுவர், தகாதவார்த்தைகளால் பேசுவர், அறிக்கை விடுவர், இவர்களின் கீழ்த்தரமான பேச்சுக்களால் தமிழர்களின் மானம் கப்பல் ஏறும், தமிழ் மாணவர்களும் இவர்களைப் போன்று கீழ்த்தரமாக நடப்பார்கள். இதுவே ஈழத் தமிழருக்கு வழங்கும் தண்டனை என்றான் யமன்.

இதன்பயனாகவே இன்று பாராளுமன்றில் மூன்று தமிழ் எம்.பிக்கள் கொடுக்குக் கட்டிக் கொண்டு தமிழர்களின் மானத்தை விற்கிறார்கள். இஃது புதிய புராணக் கதை.

# இருதய நோய்களை இல்லாது ஒழிப்பதற்கு

# சுறுசுறுப்பும், உணவுக் கட்டுப்பாடும் அவசியம்

## மருத்துவ விளக்கம்

'என்னால் முன்போலச் சிரமப்பட்டு வேலை செய்ய முடியவில்லை, அடிக்கடிமூச்சு வாங்கிறது. தொடர்ந்து நடப்பது கூடச் சிரமமாக இருக்கிறது.' என்று சொல்லுபவர்கள் வயதானவர்களிடையே அதிகம். அவர்களுக்குச் சிலசமயம் மார்புவலி கூட இருக்கும். இன்றைக்கு உருளைக் கிழங்கு சாப்பிட்டேன். வாயு உபத்திரவம் போல இருக்கிறது' என்று தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொள்வார்கள். மூச்சுவாங்குவதுடன் உடம்பு லேசாக வியர்க்கும், இடது கையில் குடைச்சல் வலியும் தோன்றும், 'தண்ணீர் வரவில்லை என்றுகாலையில் கொஞ்ச நேரம் கூடவே 'பம்பு' அடித்தேன், வாளிகளையும் இரண்டு கைகளிலும் தூக்கிக்கொண்டு வந்தேன், அது தான் கையில் குடைச்சல்' என்று ஒரு காரணத்தையும் சொல்லிக்கொள்வார்கள்.

### இரத்தோட்டம்

வயதானகாலத்தில் இதெல்லாம் சகஜம் என்று இருந்து விடாதீர்கள், 'கொஞ்சம் ஓய்வெடுத்தால் போதும். சாப்பிடாமல் ஒருவேளை பட்டினி போட்டால் சரியாகி விடும்' என்றெல்லாம் சமாதானப் படுத்திக் கொண்டு விடாதீர்கள். எதற்கும் ஒரு முறை உங்கள் இதயத் துடிப்பை இயக்கத்தைப் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். வயதான பிறகு இது மிகவும் அவசியம், உண்மையிலேயே இதுவும் ஒரு 'பம்ப்' சமாச்சாரம் தான். உலகத்திலேயே மிகவும் வலுவான, நிற்காமல் வேலை செய்யும் 'பம்ப்' அதுதான், நமதுஇருதயம். ஒவ்வொரு முறை துடிக்கும் போதும், அது 70 கன செண்டிமீட்டர் இரத்தத்தைத் தன்னிடமிருந்து வெளியேற்றுகிறது. இதையே வேறுவிதமாகவும் சொல்லலாம். ஒவ்வொரு முறை துடிக்கும் போதும் ஒரு தேநீர்க் கோப்பை அளவு இரத்தம் உடம்பின் பல்வேறு பகுதிகளிலும் ஓடுகிறது.

### இருதயம்

இருதயம் ஒருநாளில் இரண்டாயிரம் கலன் இரத்தத்தை வெளியே உந்தித்தள்ளுகிறது. சுமார் 50,000 மைல்கள் நீண்ட தொலை நீளமுள்ள இரத்த நாளங்களின் மூலம் இரத்தத்தை உடலின் வெவ்வேறு பாகங்களுக்கும் உந்தித் தள்ளுகிறது. இருதயம் ஒரு மனிதனின் சராசரி 70ஆண்டு கால வாழ்க்கையில் ஏறக்குறைய இரண்டரைக் கோடி முறைகள் சுருங்கிவிரிகிறது. இவ்வளவையும்செய்யும் இருதயத்தின் எடை சுமார் பன்னிரண்டு அவுன்ஸ். சுமார் உங்கள் கை முஷ்டி அளவேயுள்ள அது ஆறு அங்குல நீளமும் நான்கு அங்குல அகலம், அவ்வளவு தான்.

### இருதயந்தசைகளுக்கு இரத்தம்

இருதயத்தின் தசைகளுக்கு போதுமான இரத்த ஓட்டம் தேவை, இந்த இரத்த ஓட்டம் இல்லாமல்இருதயத்தின் தசைகள் செயல்பட முடியாது. இருதயம் உடம்பின் பல்வேறு பகுதிகளுக்கும் இரத்தநாளங்கள் மூலம் இதனை அனுப்பி வைக்கிறது. அதேபோல, அதுதான் இயங்குவதற்கும் உடம்பின் பலபாகங்களிலிருந்தும், பல உறுப்புகளிலிருந்தும் வருகின்ற இரத்தத்தைத் தனக்காகப் பெற்றுக் கொள்கிறது. இருதயத்தின் எடை மனித உடலின் நிறையில் இருநூறில் ஒருபங்குதான். ஆனால் மனித உடலில்உள்ள இரத்தத்தின் அளவில், இருபதில் ஒருபங்கை இருதயம் தன்னுடைய தசைகளுக்காக எடுத்துக் கொள்கிறது.

இப்படி இரத்தத்தை இருதயத்தசைகளுக்கு எடுத்து வரும் நாளங்களில வயது ஆக ஆக நாளடைவில் உட் பகுதியில் இரத்த அணுக்கள், சுண்ணாம்பு, கொலஸ்ரோல், பிற பொருட்கள் ஆகியன தேங்கியும், அதன் குறுக்களவு படிப்படியாகக் குறைந்தும் அடைப்பு ஏற்படுகிறது, இரத்த நாளங்கள் வயதான பிறகு சுருங்கியும் இரத்தம் செல்லும் அளவுகுறையலாம். இரத்த நாளங்களில் கட்டி ஏற்பட்டு அடைப்பும் ஏற்படலாம், வயதானவர்கள் சிலர், கொஞ்சதூரம் நடப்பதும், அவ்வாறு நடந்தபின்னர் மேலும் தொடர்ந்து நடக்க முடியாமல், தாங்கித் தாங்கி நடப்பதையும் பார்க்கலாம். பிறகு அவர்கள் ஓர் இடத்தில் கொஞ்சநேரம் அமர்ந்து ஓய்வெடுப்பார்கள். பிறகு மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக நடப்பார்கள். இதற்கு காரணம் அவர்களுடைய காலிலுள்ள தொங்கு தசையில் ஏற்படும் வலியேயாகும். அதற்குரிய இரத்த ஓட்டம் கிடைக்காதபோது, வலி ஏற்படுகிறது. கொஞ்சம் ஓய்வு எடுத்தால் வலிகுறைகிறது.

### உணவுக் கட்டுப்பாடுகள் அவசியம்

இதேபோல இருதயத்தின் தசைகளுக்கும் போதுமான அளவு இரத்த ஓட்டம் கிடைக்காத போது, வலி ஏற்படுகிறது. திணறலும் ஏற்படுகிறது. அப்போது வேலை செய்யாமல் ஓய்வு எடுத்துக் கொள்ளும் போது வலி கொஞ்சம் குறையும். மீண்டும் வேலை செய்தால் வலி ஏற்படும். இந்த நிலையில் வயதானவர்கள் இருதயத்தைச் சோதனை செய்து கொள்ள வேண்டியது அவசியம். இரத்த நாளங்களில் இறுக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு சிக்கல், கொலஸ்ட்ரோல் என்ற கொழுப்பு- புரதக் கலவையாகும். இரத்தத்தில் 100 கன செண்டி மீட்டர் அளவில் 150 முதல் 180 மில்லிக் கிராம் வரை கொலஸ்ட்ரோல் இருக்கலாம். இதை இரத்தப் பரிசோதனையில் கண்டு பிடிக்கலாம். இந்த அளவை மீறும் பொழுது கொலஸ்ட்ரோல் அளவைக் குறைக்க டாக்டரின் ஆலோசனையுடன் கொழுப்புச் சத்தைக் குறைக்கவும் உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் முயல வேண்டும்.

மற்றொரு அளவு படுத்தப்பட வேண்டிய அம்சம் டிரைகிளிசரைட், இது 100 கன செண்டி மீட்டர் இரத்தத்தில் 50 மில்லிக் கிராம் முதல் 200 மில்லிக் கிராம் வரை இருக்கலாம். இறைச்சி, பால் நெய், வெண்ணெய், எண்ணெயில் வறுத்த உணவு வகைகள் ஆகிய வற்றைக் குறைத்துக் கொள்வது இதை மட்டுப் படுத்தும். நார்ச்சத்துள்ள உணவும் வேகவைத்த காய் கறிகளும் நன்மை தரும்.

### சுறுசுறுப்பு தேவை

உடற்பருமன் அளவோடு இருக்க வேண்டும். இவ்வளவு உயரத்திற்கு இவ்வளவு உடல் நிறை என்று ஓர் அளவு இருக்கிறது. இதைக் காட்டிலும் நமது உடல் நிலை சற்றுக் குறைவாகவேயிருப்பது நல்லது உடல் நிறை கூடினால் இரத்தம் கொதிப்பு நீரிழிவு நோய் ஆகியவை வரக் கூடும் இவையும் இருதயப் பாதிப்புக்கு வழிவகுக்கக் கூடும் கூடிய வரை ஓடியாடிச் சுறுசுறுப்புடன் இருப்பது நல்லது. ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு, ஓடியாடி வேலை செய்பவர்களைக் காட்டிலும் பாதிப்பு வரக் கூடிய வாய்ப்பு அதிகம். ஆகையால் அலுவலகத்தில் உட்கார்ந்து வேலை செய்பவர்களும், அவ்விதம் இருந்து, வேலை பார்த்து ஓய்வு பெற்றவர்களும் சற்று ஓடியாடி பழகக் கூடிய நடக்கக் கூடிய பணிகளை மேற்கொள்வது நல்லது. தினந்தோறும்காலையிலும் மாலையிலும் நடப்பது இரத்த ஓட்டத்தினை ஊக்குவிக்கும்இரத்தம் இருதயத்துக்குச் செல்லும் குழாய்களுக்கு ஓரளவு மாற்று வழியைக் கூட ஏற்படுத்தும்.

### நடத்தல் நன்று

காலை நேரத்தில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்து விட்டு நடக்க ஆரம்பிக்கலாம் லேசான வெய்யில் படும்படி நடப்பது நல்லது தினமும் தவறாமல் நடக்க வேண்டும் ஓரளவு சைக்கிள் விடுவது கூடப் பயன் தரும் பதட்டமில்லாமல் நிதானமாக நடக்க வேண்டும் லேசான உடற்பயிற்சியைச் செய்யலாம குழந்தைகளுடன் விளையாடலாம். கொஞ்சநேரம் வேலை செய்யலாம். லேசாகச் சில மாடிப்படிகளில் ஏறி இறங்கலாம். இவை யெல்லாம் இருதயத்திற்கு நாம் அளிக்கக் கூடிய லேசான பயிற்சிகள் சில பழக்கங்களைக் கைவிடுவது நலலது. புகை பிடிக்கும் வழக்கம், மது அருந்தும் பழக்கம் ஆகியவற்றை விட்டு விடவேண்டும். உடனே முடியாவிட்டாலும் படிப் படியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். இச்சைகளைத் தூண்டக் கூடிய பழக்கங்கள் உறவு ஆகிய வற்றை அடியோடுநிறுத்திவிட வேண்டும். இருதயப் படபடப்பு, திகில் பயம் ஆகியவற்றைத் தூண்டும் பொழுது போக்குகள், படங்களைப் பார்ப்பது, புத்தகங்களைப் படிப்பது ஆகிய வற்றை விட்டுவிட வேண்டும்.

(அடுத்தவாரம் தொடரும்)

நன்றி ஹெல்த்

## ★ எஸ். எல். எஸ். ☆

# சமாதான முன் முயற்சிகளுக்கு பகிரங்க ஆதரவு வழங்க வேண்டும்

## அவுஸ்திரேலியாவிடம் வேண்டுகோள்

[கொழும்பு]

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஈடுபடும் நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர அவுஸ்திரேலியா அரசாங்கம் பகிரங்கமாக ஆதரவு வழங்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் அவுஸ்திரேலிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்ட எம். பி. யோசப் பரராஜசிங்கம் அங்கு, இந்திய பற்றுப் தெற்காசிய நாடுகளுக்கான பணிப்பாளர்கள், அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் அவுஸ்திரேலிய அரச பிரதிகள் ஆகியோரைச் சந்தித்துப்பேச்சு நடத்தியிருந்தார்.

அப்போதே நோர்வே அரசின் சமாதானமுயற்சிகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆதரவு வழங்க வேண்டுமென்றுகேட்டுக்கொண்டார்,

அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழகத்தின்12 வதுஆண்டு நிறைவு மகா நாட்டில் கலந்து கொள்ள அவுஸ்திரேலியா சென்றிருந்த எம்.பி. அங்கு மெல்பன் சிட்னி நகரங்களில் நடைபெற்ற மகாநாடுகளில் பங்கு பற்றி உரையாற்றியுள்ளார். [உ-இ]

## மஹோற்சவம்

(சுழிபுரம்)

சுழிபுரம் பறாளாய் சிவ சுப்பிரமணிய ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்துபத்துத்தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர் வரும் 4 ஆம் திகதி இரதோற்சவமும் 5 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ-ப-10)

## ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

(இணுவில்

ஈவினைப பிரதேசத்திற்கான ஆரம்பசுகாதாரகுடும்ப நல நிலையம் அண்மையில் கோப்பாய் பிரதேச செயலர் எஸ் கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. (உ-49)

## பொன்னாடை போர்த்திக் கௌரவம்

[யாழ்ப்பாணம்]

இணுவில் விஸ்வேஸ்வரப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் தொடர் சொற்பொழிவாற்றிய ஆசிரிய மணி எஸ் ஸ்ரீ தயாளனைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்துப் நிகழ்வு விரைவில் இடம் பெறவுள்ளது.

[உ]

# 2006ம் ஆண்டின் பின்னர் ஜனாதிபதிசந்திரிகாவேபிரதமராவார்!

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவே 2006ம் ஆண்டிற்குப் பின்னர் நாட்டின் ஜனாதிபதியாக இல்லாது பிரதமராக இருப்பார் என்று நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீரா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஹங்குனுகொலச என்னுமிடத்தில் குடிநீர்த் திட்டமொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசும்போதே மேற்கண்டவாறு அமைச்சர் மங்கள சமரவீரா தெரிவித்துள்ளார்.

அங்கு அமைச்சர் மேலும் பேசுகையில் தெரிவித்திருப்பதாவது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொன்விழா 2004ஆம் ஆண்டு நடைபெறுவதைமுன்னிட்டு இலங்கையில் அரசியல் அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டு 2006ம் ஆண்டு தேர்தலில் போட்டியிடுவதன்மூலம் பிரதமராக வருவார்.

இரு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்த சந்திரிகா குமாரதுங்க மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாதென எதிர்க்கட்சியினர் ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவே 2006ம் ஆண்டுக்குப் பின் நாட்டின் பிரதமராக இருப்பார்.

தற்போதைய அரசியல் அமைப்பின் பிரகாரம் இன்னுமொருதடவை ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க வரமுடியாதென்பது குறிப்பிடத்தக்கது (வ)

### தடையை

மேலும் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அரசின் இத்தகைய தீவிர போக்கினாலேயே விடுதலைப் புலிகள் தமது தடையை நீக்க வேண்டுமென்று கோரிவருகின்றனர்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தீவிரபோக்கை காட்டாமல் விட்டுக்கொடுத்துப் படிப்படியாக இந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

சமாதானத்தை என்ன விலைகொடுத்தும் எந்த விதமான தியாகத்தைச் செய்தும் அதனை அடைய வேண்டுமென்றும் ஆயர் கூறினார். (ம

### சோதனைக--

ஈடுபட்டிருந்த ஆசிரியர் எஸ். தவரட்ணராஜ் கைகளில் சிறுகாயங்களுக்குள்ளானார்.

காயமடைந்த மாணவிகளில் கோகிலா, விஜிதா, ஆகிய இருமாணவிகளும் கண்களிலும் முகத்திலும் காயங்களுக்குள்ளானார்கள்.

எனினும் இவ் மாணவிகளினதும் கண்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மற்றும் லாவண்யா, வசமதி சிவதர்சினி ஆகியமூன்றுமாணவிகளும் சிறு காயங்களிற்குள்ளானார்கள். (வ-10)

### நோாவே..-

## சைவசமய விவகாரக்குழுகலைப்பு

# யாழ்.மாநகர முதல்வர் ரவிராஜ் தன்னைத் தலைவராக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையுடன்சேர்ந்து இயங்கியசைவ சமய விவகாரக்குழுவின் நிர்வாகசபை கலைக்கப்பட்டு புதியநிர்வாகம் நேற்று நியமிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் அறிவித்துள்ளார்.

இன்நியமனத்தின்பிரகாரம் யாழ் மாநகர முதல்வர் என் ரவிராஜ் தன்னைத் தானே தலைவராக அறிவித்ததுடன் உபதலைவராகப்பிரதி மேயர் கந்தையன்நியமிக்கப்பட்டார்.

புதியநியமனத்தை அறிவித்து உரையாற்றியமுதல்வர் என்.ரவிராஜ் கடந்தகாலங்களில் வெளியான நல்லைக்குமரன்மலரில் முதல்வர்களின் ஆசிச்செய்தி எதுவுமில்லை என்றுகூறினார்

இதுஇவ்வாறிருக்க நல்லைக்குமரன்மலரை வெளியிடும் அதிகாரம் எதுவும் முதல்வர் ரவிராஜுக்கு இல்லையெனவும்தொடர்ந்தும்ஒன்பதாவது நல்லைக்குமரன் மலரை அகில இலங்கை சைவசமயவிவகாரக்குழுவெளியிடுமென்றும் அதன்பதிப்பாசிரியர் நேற்று தெரிவித்துள்ளார். (ந)

### புலிகள் .

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனைகளை நடத்தியுள்ளாரென செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம், சமரசப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவே மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல் பணிப்பாளர் ஆரியரூபசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவது சமாதானச் சூழல் கனிந்து வருவதையே வெளிப்படுத்தி நிற்பதாக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். )இ)

### 10மாணவர்

பாணத்தின் பிரபல்யமான

### ஆங்கில

மேற்படி திட்டத்தை அமுல் செய்யும்.

தமது புதிய திட்டத்தை விடாது முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சின் கல்விச்சீர்திருத்தத்திற்கான பணிப்பாளர் ஆர். எஸ். மெதகம தெரிவித்தார்.

ஒருகல்லூரியில் 10அல்லது 12வரையான மாணவர்கள் ஆங்கிலத்தில் கற்கமுன்வந்தாலும் அங்கே ஆங்கில மூலமான பாடநெறி போதிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார் புதிதாக இத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதால் அதற்காகும் செலவீனம் பொருட்படுத்தப்படுவதற்கில்லை என அவர்மேலும்தெரிவித்தார்.

### சமாதான .

றப்படவேண்டுமென கோரப்படுவதும் அதனைஆராய்ந்து தீர்க்கமான முடிவெடுப்பதில் அரசு எடுக்கும்காலதாமதமும் சமாதானப்பேச்சை ஆரம்பிப்பதில் காலதாமதத்தை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அரசுக்குஎதிராக ஐக்கியதேசியக்கட்சிகொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்பார்த்து அதனைமுடிவுக்கு கொண்டுவந்தபின்னர் விடுதலைப் புலிகளுடனான சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாமென அரசின்ஒருபகுதியினர்

# கனடிய உயர் நீதிமன்றில் சுரேஸ் மீதான வழக்கு விசாரணைஇன்றுநடக்கும்

[லண்டன்]

அகதிகளை அவர்களது சொந்த நாட்பிற்கு திருப்பியனுப்பினால், அங்கு அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவார்களாவென்பது குறித்து கனேடிய உச்சநீதிமன்றம் இன்று விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

அகதி அந்தஸ்து கோரிய நிலையில் கடைாவில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த சுரேஸ் மாணிக்கவாசகம் மற்றும் ஈரானைச்சேர்ந் மன்சூர் அகாளி ஆகியோரது வழக்குகள் சம்மந்தமாகவே மேற்படி கனேடிய உச்ச நீதிமன்றம் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பான விசாரனை முன்னர் விசாரித்த கனேடிய முதல் நிலை நீதிமன்றம், கனடா உலகப் பயங்கர வாதிளின் தங்குமிடமாக மாறிவிட்டதெனவும் சொந்த நாட்டுக்கு அவர்கள்திருப்பியனுப்பபட்டால் அவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவார்களென்பதை ஏற்றுக் கொள்ளமுடியாதெனவும் குறிப்பிட்டுள்ளது. [இ]

## நோர்வேயில் அரசியல்தஞ்சக்

# நிராகரிக்கப்பட்டவர்கள் திருப்பி அனுப்பப் படுவர்!

(வவுனியா)

நோர்வேயில் அரசியல்தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்களை கட்டங்கட்டமாக திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளை நோர்வேயரசு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசியல்தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களில், 14 தமிழ் இளைஞர்கள் ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தையும் வவுனியாவையும் சேர்ந்தவர்களாவர். இவர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் அனைவரையும் பிணையில் செல்ல அனுமதித்துள்ளனர் (ம)

# வடக்கு கிழக்கில் 40பேர் கூ- ப- நியமனம் பெறுவர்

[யாழ்ப்பாணம்]

வடக்குக்கிழக்குமாகாணத்தில் கூட்டுறவுத்திணைக்களங்களில் உத்தியோகப் பற்றற்ற கணக் காய்வாளர் களாக கடமை யாற்றும் சுமார் 40 பேர் விரைவில்கூட்டுறவுப்பரிசோதகர்களாக நியமனம் பெறவுள்ளனர்.

இந்த நாற்பது பேர்நியமனம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைத்தபின் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான அடிப்படைத்தகைமை உடையவர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளதாகவும், அதன் பின் கூட்டுறவுப்பரிசோதகர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும், வடக்குக் கிழக்கு மாகாண சபையின், கூட்டுறவுத்திணைக்கள உயர் அதிகாரியொருவர் வலம்புரிக்குத் தெரிவித்தார். (வ)

## ஒருவர் உயிரிழப்பு

## பெற்றோல் விநியோகம்

(யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண எரி பொருள் நிலையங்களில் நேற்று பெற்றோல் வினையோகிக்கப்பட்டது. (ம)

ஊழியர் சங்கம்

## மறியல் போர்

(கொழும்பு)

விசளுமை சிறு காயங்களிற்குள்ளானார்கள். (வ-10)

## நோர்வே..

வதற்கு சர்வ தேச அழுத்தத்தை இலங்கை அரசு மீது ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாக இருக்கலாம் என்றும் நோர்வேயின் இராஜதந்திர வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இலங்கைஅரசிற்கும்தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் பூரணவெற்றியை தழுவாதநிலையிலும், புலிகள் மீதான தடைநீக்கம் தொடர்பாக இலங்கை அரசின்நிலைப்பாடு குறித்து எதுவும் அறியப்படாத நிலையிலும் தூதுவர் எரிக்சோல்ஹெய்மும பிரதி வெளிவிவகார அமைச்சரும் அமெரிக்கா சென்றிருப்பது இலங்கையின்இனப்பிரச்சனை தொடர்பான தற்போதைய நிலையினை அமெரிக்க தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்கே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இருவரினதும் அமெரிக்க விஜயத்தைஅடுத்து இலங்கை மீது அமெரிக்கா பிரயோகிக்க உள்ள அழுத்தத்தைப்பொறுத்தே புலிகள் மீதான தடை நீக்கம் பற்றிய நிலைப்பாட்டில் மாற்றத்தைக் காணமுடியுமென்றும் ராய்ட்டர் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (வ)

## 10மாணவர்

பாணத்தின் பிரபல்யமான கல்லூரி ஒன்றின் சிரேஷ்ட மாணவத் தலைவரெனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை சம்பந்தப்பட்ட மாணவர்கள்இருகுழுக்களாக இயங்குவதாகவும் இக்குழுக்களுக்குப் பொறுப்பான தலைவர்கள் பற்றியும் நீதிமன்ற விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கைதான இரு மாணவர்களுக்கும் நீதிபதி இ. த. விக்னராஜா புத்திமதி கூறினார்.

சம்பந்தப்பட்டபத்து மாணவர்களையும் கைது செய்வதில் பொலிஸார்தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (ந)

## விமானசேவை

ரான் அலுவலகம் அறிவித்துள்ளது.

விமானச்சுத்திகரிப்புப்பணிகள் இடம்பெறுவதனால் இன்று பயணிகளுக்கான விமான சேவை இடம்பெற மாட்டாதெனவும் நாளை முதல் வழமை போல் சேவை மீண்டும் ஆரம்பமாகுமென்றும் ரான் அலுவலகம்மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றும் விமான சேவை நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

வந்தபின்னர் விடுதலைப் புலிகளுடனான சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாமென அரசின்ஒருபகுதியினர் விரும்புவதாலும சமாதானப் பேச்சு ஆரம்பமாகுவது மேலும் காலதாமதமடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## திருமலை -

சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது வலது கை மணிக்கட்டுப் பகுதியுடன் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் கண் ஒன்றும் பார்வை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்பு சம்பவம் நேற்று மாலை 3-5மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது புனர்வாழ்வுப் பிரிவில் கடமையாற்றும் சந்திரகாந்தி, யசோதரா ஆகிய இரு பெண் ஊழியர்கள் காயமடைந்தனர்.

இக் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக திருமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிபர் தலைமையிலான குழுவினரும் இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இச் சம்பவத்தையடுத்து அலுவலகத்திற்கு வந்திருந்த பொதுமக்களும் ஊழியர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்

## ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

கடந்த மாதம 18ம் திகதி திருகோணமலைதுவரங்காட்டுப் பகுதியில் படையினருடனான மோதலின்போது

★ கப்டன் கவியமுதன்
(குலசேகரம் ஞானவேல்)
திருகோணமலை

என்ற போராளிதமதுதரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

## பாதுகாப்பு

காப்பு [illegible] பட்டார்.

நேற்று இடம்பெற்றஇச்சம்பவம்பற்றிதெரியவருதாவது:

ஊழியர் பாவனைக்குரிய பாதையூடாக வைத்தியசாலைக்குள் பிரஸ்தாப நபர் நுழைய முற்பட்டார் அவரை பாதுகாப்பு ஊழியர் தடுத்த போது இருவருக்கு மிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பின்னர் கைகலப்பாக மாறியது.

இதேவேளை மேற்படி சம்பவத்தை அவதானித்த வைத்தியசாலைப் பொலிசாரும் வைத்தியசாலைநிர்வாகஉத்தியோகஸ்தரும் நிலமையை சமாளித்துகுறித்தபாதுகாப்பு ஊழியரை எச்சரிக்கை செய்துள்ளனர். (இ-10)

ஊழியர் சங்கம்

## மறியல் போர்

(கொழும்பு)

வேலைநீக்கம்செய்யப்பட்ட 131 புகையிரத சேவை ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைந்துகொள்ளவேண்டும் என்றுகோரி இன்று அகில இலங்கை புகையிரத சேவைஊழியர்சங்கம் மருதானை புகையிரத நிலையத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இம்மறியல் போருக்கு ஆதரவு தெரிவித்துபொது ஊழியர் சங்கம், புகையிரத ஊழியர் தொழிற்சங்கம், மற்றும் அரசியல் பிரமுகர்கள் பலர் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். [இ]


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
**எம். ஜி. ஆர், சரோஜாதேவி நம்பியார் நடித்த**
**எங்கவீட்டுப் பிள்ளை**
11-00, 2-30 பு: நே:
சனி ஞாயிறு பி. ப 6 மணி
(ரீல்ஸ்) (கி-1977)



இப்பத்திரிகை "வலம்புரி" அஸ்கோ நிறுவனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.